


அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com


அ.எண்.267/2015
தேதி. 06.11.2015

## மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் வைகோ தாயார் மரணம்

## ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ இரங்கல்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வைகோ தாயார் மாரியம்மாள் வயது 96 உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்திய செய்தி மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது. எனது நெருங்கிய நண்பர் வைகோ அவர்களின் அன்புத் தாயார் மறைவு என்னுடைய குடும்பத்தில் ஒருவரின் இழப்பு போன்று உணர்கிறேன். வைகோ அவர்களின் அரசியல் பயணத்தில் இறுதிவரை துணை நின்ற திருமதி.மாரியம்மாள் அவர்களுடைய பெருந்தன்மையை தமிழ்மண் நன்கு அறியும்.

தாயாரின் மறைவு ஈடு செய்யமுடியாத இழப்பாக இருக்கும் வைகோ அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இயக்கத் தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.